சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R.பாண்டி, பிஎஸ்.ஸி.,பி.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12-ம் நாள் செவ்வாய்கிழமை

இடைமனு எண்.3/2025

இன்

அசல் வழக்கு எண்.319/2017

....

விஜயா ...மனுதாரர்/வாதி

/எதிர்/

1) மாணிக்கம் ....1-ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி

2) மாவட்ட வருவாய் அலுவலகர்,
மாவட்ட ஆட்சியர் வளாகம், சிவகங்கை ....2-ம் எதிர்மனுதாரர் /
Proposed 2-ம் பிரதிவாதி

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்காக 28.07.2025-ம் தேதியன்று வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.C.இளங்கோவன் அவர்கள் ஆஜராகியும், 1-ம்எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.C.ரமணிதுரை அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்தும் அவர் ஆஜரில்லாததால் அவரை ஒருதலைபட்சமாக தீர்மானித்தும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், மனுக்கோப்புகளை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . . .

**உத்தரவு**

அசல் வழக்கில் 2-ம் எதிர்மனுதாரர்/ Proposed 2-ம் பிரதிவாதியை தரப்பினராக சேர்த்துக்கொள்ள உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் கட்டளை 1, விதி 10(2)-ன் கீழ் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.</u>

தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி, வாதியாக இருந்து மனுதாரரையும் அவரது மகனையும் பிரதிவாதிகளாக வைத்து இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.140/2018 வழக்கு தாக்கல் செய்து அதுவும் தாவா வழக்குடன் இணைத்து Joint Trial ஆக விசாரணைக்கு உள்ளது. மேற்படி வழக்கு விசாரணையில் இருக்கும்போது மேற்படி வழக்கு விசாரணையை மறைத்து தாவா சொத்திற்கு மனுதாரர் பெயரிலுள்ள பட்டாவினை ரத்து செய்யக்கோரி 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி சிவகங்கை RDO மன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். ப.மு. A3/9502/2023 மேற்படி மனுவும் கடந்த 24.11.2023ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. மேற்படி உத்தரவை எதிர்த்து சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலர் மன்றத்தில் மேல்முறையீடு செய்து தாவா சொத்திற்கு மனுதாரர் பெயரில் உள்ள பட்டாவினை ரத்து செய்யக்கோரி 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி முயற்சி செய்து வருகிறார். 1ம் எதிர்மனுதாரரின் செயல் சட்ட விரோதமானதாகும். 1ம் எதிர்மனுதாரர் காவல்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தாவா சொத்திற்கு மனுதாரர் பெயரில் உள்ள பட்டா ரத்து செய்யப்பட்டால் அது மனுதாரருக்கு பெருத்த நஷ்டம் மற்றும் பாதிப்பாகிவிடும். எனவே மேற்படி வழக்கின் இறுதிநிலை எட்டும் வரை தாவா சொத்தைப் பொறுத்து சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் எவ்வித பட்டா மாறுதல் உத்தரவும் செய்யக்கூடாதென தடை உத்தரவு கோருவதற்கு ஏதுவாக மேற்படி அசல் வழக்கில் 2ம் எதிர்மனுதாரர்/Proposed 2-ம் பிரதிவாதியை தரப்பினராக சேர்க்கவேண்டியது அவசியமாக உள்ளது. இல்லாவிடில் மனுதாரருக்கு ஈடு செய்ய இயலாத கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும். எனவே மேற்படி மனுவை ஏற்று உத்தரவிடவேண்டும்.

3) 1-<u>ம்எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம்.</u>

மனு பாரா 1 முதல் 3 வரையிலான சங்கதிகள் எதிர்மனுதாரர் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. O.S.No.319/2017 வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு அதன் பிறகு Restore செய்யப்பட்டுள்ளது என்றும் O.S.No.140/2018 வழக்கிலும் இருமுறை Exparte Decree பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் எதிர்மனுதாரர் தரப்பில்

ஆவணங்கள் குறியீடு செய்திட 28.01.2025 வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் தாவா மனுவினை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்றும், இரண்டு அசல் வழக்குகளில் கோரப்பட்டுள்ள பரிகாரங்களுக்கு வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களே போதுமானது என்றும் தாவா வழக்கில் சேர்க்கவேண்டும் என சொல்லப்பட்ட DRO அவசியமற்றவர் என்றும் DRO முன்னிலையிலான நடவடிக்கை பட்டா ரத்து செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்டது என்றும் தாவா இரண்டு வழக்குகளுக்கும் மேற்படி DRO நடவடிக்கைக்கும் தொடர்பு கிடையாது என்றும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு இடையே யாரிடமும் தாவா சொத்துக்களுக்கான உரிமை மூலமும் மற்றும் அனுபவமும் உள்ளது என்பதைப் பொறுத்து தாவா வழக்குகள் தீர்மானிக்க முடியும் என்றும் தாவா வழக்குகளும் DRO நடவடிக்கையும் இரண்டும் வெவ்வேறானவை மற்றும் தனித்தன்மை கொண்டவை. மேற்படி இரண்டிலும் தகுதி வாய்ந்த அதிகாரம் பெற்றவர்களால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் மேற்படி DRO நடவடிக்கையின் முடிவிற்கு மாண்பமை சார்பு நீதிபதி தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியமோ, தேவையோ இல்லை என்றும் அதேபோன்று தான் தாவா வழக்கின் முடிவிற்கும் DRO ஒரு அவசியமான அல்லது தேவையான தரப்பினராக சேர்க்க வேண்டியதில்லை என்றும் தாவா மனுவினை தாக்கல் செய்திருப்பது மேலும் தாவா அசல் வழக்கினை காலம் நீட்டிப்பு செய்திடவேண்டும் என்றும் எனவே தாவா மனுவினை தள்ளுபடி செய்திட வேண்டும் என எதிர் உரையில் சொல்லப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் மனு அனுமதிக்கத் தக்கதா என்பதேயாகும்?

5. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பார்வையிடப் பட்டன.

6. தாவா மனுவானது அசல் வழக்கான O.S.No.319/2017 வழக்கின் மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட வருவாய் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகம், சிவகங்கை என்பவரை தரப்பினராக சேர்க்கவேண்டும் என்பதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7.** தாவா மனுவின் மனுதாரர்/வாதியால் அசல் வழக்கு O.S.No.319/2017 ஆனது எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டது என்றும் மேற்படி எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியால் அசல் வழக்கு எண் O.S.No.140/2018 ஆனது தாவா மனுவின் மனுதாரர் மற்றும் அவரின் மகனுக்கு எதிராக தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் O.S.No.319/2017 -ம், O.S.No.140/2018 -ம் உடன் இணைந்த வழக்கு (Joint Trial) களாக விசாரணை செய்யப்பட்டு வரும் நிலையில் தாவா சொத்திற்கு மனுதாரர் பெயரிலான பட்டாவை ரத்து செய்திட சிவகங்கை RDO மன்றத்தில் மனு தாக்கல் செய்து 24.11.2023-ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி உத்தரவிற்கு எதிராக சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலர் மன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்து மனுதாரர் பெயரிலான பட்டாவை ரத்து செய்திட எதிர்மனுதாரர் தீவிர முயற்சி செய்து வருகிறார் என்றும் எனவே தாவா வழக்கில் இறுதிநிலை எட்டும் வரை தாவா சொத்தைப் பொறுத்து சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் எவ்வித பட்டா மாறுதல் உத்தரவு செய்யக்கூடாதென தடையுத்தரவு கோருவதற்கு ஏதுவாக மேற்படி அசல் வழக்கில் 2ம் எதிர்மனுதாரர்/ proposed 2-ம் பிரதிவாதியை தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது என்பதற்காக தாவா மனு பரிகாரம்கோரப்பட்டுள்ளதாக மனுதாரர் தரப்பில் வாதம் புரியப்பட்டது.

**8**. இருதரப்பு வழக்கு சங்கதிகளை பரிசீலனை செய்கையில் தாவா மனுவில் குறிப்பிடும் மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட வருவாய் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகம், சிவகங்கை என்பவர் தாவா அசல் வழக்கு பிரச்சனையை இறுதியாக தீர்மானம் செய்திடுவதற்கு அவசியமான (necessary) தரப்பினரா? என்று பார்க்கையில் தாவா அசல் வழக்கு O.S.No.319/2017 மற்றும் அசல் வழக்கு O.S.No. 140/2018 இரண்டும் தாக்கல் செய்யப்பட்டு 7, 8 வருடங்களுக்கு மேல் நிலுவையில் உள்ளது என்பதை மேற்படி வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்கையில் அறிய முடிகிறது. மேற்படி இரண்டு அசல் வழக்குகளும் தாவா சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட

வழக்காகும். மேற்படி சூழலில் தாவா சொத்திற்கான உரிமை மூல பாத்தியம் மற்றும் அனுபவ பாத்தியம் குறித்து ஆவணங்களை வாதி, பிரதிவாதி இருவரில் யார் சாட்சிய, சான்றாவணங்களாக தாக்கல் செய்து நிரூபிக்கிறார்களோ அவர்களை பொறுத்தே தாவா அசல் வழக்குகள் இறுதியாக தீர்மானிக்க இயலும்.

9. மேலும் தாவா மனுவில் குறிப்பிட்டுள்ள மாவட்ட வருவாய் அலுவலரிடம் தாவா சொத்தைப் பொறுத்து உரிமைமூல பாத்தியம் உள்ளதாக இருதரப்பு வழக்கும் இல்லை. மேற்படி சூழலில் தாவா அசல் வழக்குகளைப் பொறுத்து இறுதியான தீர்மானம் செய்திட மாவட்ட வருவாய் அலுவலர் ஒரு அவசிய தரப்பினர் அல்ல.

10. மேலும் மாவட்ட வருவாய் அலுவலரிடம் RDO பிறப்பித்த உத்தரவின் பேரில் மேல்முறையீடு செய்திட சட்டத்தின்படி உரிமை உள்ள நிலையில் மேற்படி சட்டப்படி அதிகாரம் பெற்ற மாவட்ட வருவாய் அலுவலர் எடுத்திடும் நடவடிக்கையை பொறுத்து உரிய அதிகாரத்திடம் மேல்முறையீடு தாக்கல் செய்திட மனுதாரருக்கு சட்டத்தால் வழியுண்டு என்பதும் சட்டப்படி உரிய அதிகாரம் கொண்டு செயல்படும் மாவட்ட வருவாய் அலுவலரது நடவடிக்கையானது இந்நீதிமன்ற நடவடிக்கையிலிருந்து தனித்துவ நடவடிக்கை என்றும் மேற்படி நடவடிக்கை எடுத்திடும் சட்ட அதிகாரம் பெற்றவரை தாவா வழக்கில் தரப்பினராக சேர்த்து அவரது நடவடிக்கைக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டும் என்ற கோரிக்கை ஏற்புடையதல்ல என்ற எதிர்மனுதாரர் தரப்பு வாதம் ஏற்கும்படி உள்ளது.

11. மேலும் தாவா வழக்கு பிரச்சனை குறித்து தீர்மானம் செய்திடுவதற்கு சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலர் ஒரு தேவையான மற்றும் அவசியமான (Proper and necessary party) தரப்பினர் அல்ல என்பதால் தாவா மனுவினை தள்ளுபடி செய்திடுவது ஏற்புடைய ஒன்று என இந்நீதிமன்றம் தீர்மானம் செய்கிறது.

முடிவாக தாவா மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு 2025-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R Pandy Digitally signed by R Pandy Date: 2025.08.12 16:23:00 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் -** இல்லை.

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணம்** - இல்லை.

R Pandy Digitally signed by R Pandy Date: 2025.08.12 16:22:56 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

Subordinate Court,
Sivagangai
I.A.No.3/2025 in
O.S.No.319/2017
**Draft/Fair/Order**
12.08.2025